

# தமிழிசை

"எமது பிரதேசத்தின் தொன்மைகளைத் தேடும்
பன்முக கலை, இலக்கிய இதழ்"

பிரதேச செயலகம் - குச்சவெளி

# தமிழிசை

**இதழ் - 01**

**"எமது பிரதேசத்தின் தொன்மைகளைத் தேடும்
பன்முக கலை, இலக்கிய இதழ்"**

**இலைமறை காயாக எமக்குள் மறைந்துள்ள எமது
திறமைகளையும் இளந்தலைமுறையினருக்கான களத்தினையும்
அமைத்துக் கொடுப்பதற்கான ஒரு முயற்சி.**

வெளியீடு:
பிரதேச கலை, இலக்கிய வட்டம்,
பிரதேச செயலகம்,
குச்சவெளி.

# இதழ் விபரம்


**இதழ் தலைப்பு** : **தமிழிசை**

**இதழ் விடயம்** : **கலை இலக்கியம்**

**முதற் பதிப்பு** : **03 ஜனவரி 2022**

**இதழாசிரியர்** : **ச. கோபிரமணன்**

**பக்கங்கள்** : **30**

**ஆலோசனைக் குழு :**

**திரு. கு. குணநாதன்**
(பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், குச்சவெளி)

**திருமதி. இ. பாமா**
(உதவி பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், குச்சவெளி)

**திரு. ச. அன்ரனிதாஸ்**
(கணக்காளர், பிரதேச செயலகம், குச்சவெளி)

**திரு. இ.மு. நாசிக்**
(உதவித் திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலகம், குச்சவெளி)

**திருமதி. நா. நவீந்திரதாஸ்**
(நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச செயலகம், குச்சவெளி)



**முகவரி** : “தமிழிசை”
பிரதேச கலை, இலக்கிய வட்டம்,
பிரதேச செயலகம்,
குச்சவெளி.
www.tamilicai2022@gmail.com
WhatsApp_ 0771385004

# முன்னுரை

எமது பிரதேச செயலகத்தின் புதிய ஆண்டின் தொடக்க நிகழ்வு குறித்து வாராந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் எமது பிரதேச செயலாளர் அவர்களால் கருத்துரைக்கப்பட்டதுடன் கிளைகள் ரீதியாக ஏதாவது ஒரு நிகழ்ச்சியினையும் ஏற்பாடு செய்யச் சொல்லியிருந்தார்.

அந்த விடயம் தொடர்பாக சிந்தித்தபோது, நாம் செய்யும் செயற்பாடு வருடத்தின் தொடக்க நிகழ்வாகவும் இருக்க வேண்டும் அதே சமயம் தொடர்ச்சியானதாகவும் இருக்க வேண்டும் என உள்மனம் சிந்தித்தது. அப்போது தான் கவிதை இதழ் ஒன்றினை வெளியிடலாம் என்ற இந்த எண்ணம் உருவானது.

முதலில் இரகசியமாக இதைச் செய்து 03.01.2022 அன்று வெளியிடுவது தான் எனது நோக்கம். அலுவகத்தில் கவிதைகளைப் பெற வேண்டும் என்ற நோக்கில் பிரியதர்சினி மற்றும் கிஷாந்தினி இருவரையும் சந்தித்து எனது யோசனையைக் கூறினேன். அவர்களும் கவிதைகளை பெற்றுத்தருவதாக கூறி அந்த முயற்சியில் ஈடுபட்டனர். இருப்பினும் ஒரு இதழுக்கான கவிதைகளை சேர்க்க வேண்டுமே என்ற மனக்குழப்பம்....

எமது பிரதேச செயலக வட்சப் குரூப்பில் போடுவோமா...? வேண்டாமா...? என்ற மனப் போராட்டம் ஒருபக்கம்... பிரதேச செயலாளர் உட்பட மற்ற அலுவலர்கள் என்ன சொல்லுவார்கள் என்ற எண்ணம் ஒரு புறம்....

மனதைத் திடப்படுத்திக் கொண்டு வட்சப் குரூப்பில் இந்த விடயம் தொடர்பான தகவலை வெளியிட்டேன். வெளியிட்டதன் பின்னும் மனதுக்குள் போராட்டம் தான்... ஒரு ஐந்து நிமிடத்தில் எமது கணக்காளரிடமிருந்து எதிர்வினை சாதகமாக வந்தது. பின்னர் தொலைபேசியில் என்னைத் தொடர்பு கொண்டு ஊக்கமளித்ததுடன்

ஆலோசனைகளையும் தெரிவிக்க மனதுக்குள் ஒரு உற்சாகம் வந்தது.

அதன் பிறகு இரவு 9.03 எமது பிரதேச செயலாளரிடமிருந்து வட்சப் குருப்பிற்கு ஒரு செய்தி "Good idea Please speak on this" என்று மீண்டும் உட்சாகம்... மறுநாள் காலை பிரதேச செயலாளரைச் சந்தித்து அவருடைய ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்களைப் பெற்றுக் கொண்டேன்.

இவ்வாறு தான் "தமிழிசை" உருவானது. பிரதேச செயலாளரது வழிகாட்டுதலுக்கு இணங்க இவ்விதழ் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை பன்முக, கலை, இலக்கிய இதழாக எமது பிரதேச செயலகத்திட்குட்பட்ட வளர்ந்து வரும் எழுத்தாளர்களுக்கான ஒரு களமாக இனி வரும் காலங்களில் செயற்படும்.

எமது பிரதேச செயலகத்தில் முன்பும் பலமுறை இவ்வாறான நூல் வெளியீடு தொடர்பான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு கைவிடப்பட்டதாலோ என்னவோ பலர் ஆக்கங்கங்களை தர எத்தனிக்கவில்லை. இருப்பினும் 9 அலுவலர்களுடைய 12 கவிதைகள் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன. ஆக்கங்களை தந்த அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்வதுடன் எதிர்வரும் காலங்களில் இவ்விதழ் சிறப்புற வெளிவர அனைவரதும் ஒத்துழைப்பை பெரிதும் எதிர்பார்ப்பதுடன் இவ்விதழின் உருவாக்கத்தில் பங்களிப்புச் செய்த அனைத்து நல் உள்ளங்களிற்கும் எனது நன்றிகள்.

அன்புடன்

**ச. கோபிரமணன்**

தலைமையக சமுர்த்தி முகாமையாளர்,
பிரதேச செயலகம்,
குச்சவெளி.

# அணிந்துரை

குறிக்கோளுடன் அமைந்த ஒரு அழகியல் / அறிவியல் கூறுதலே இலக்கியம் எனப்படுகின்றது. இவை நிகழ்காலத்தின் கண்ணாடியாகவும் கடந்த காலங்களின் சாட்சிகளாகவும் விளங்குகின்றன. வரலாற்றின் பாடங்களை அவ்அவ் காலங்களில் எழுந்த இலக்கியங்களில் இருந்து நாம் கற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கின்றது.

மனித பரிணாம வளர்ச்சியில் தொடர்பாடல், எழுத்து, இலக்கியங்கள் என்பவற்றின் பயன்பாடு நாகரீகத்தின் ஒருவித உச்ச நிலையினையே எமக்கு காட்டிநிற்கின்றன. காலத்துக்குக் காலம் பல்வேறு குழுக்களாலும் தனிமனித ஆளுமைகளாலும் காலத்தின் ஓட்டம் இலக்கியங்களாகப் பரிணமித்து எமது கரங்களில் தவண்டிருக்கின்றன.

இன்றைய சூழ்நிலையில் மனித வாழ்க்கையின் பல்வேறு போக்குகள் எம்மிடையே ஒருவித அவசர நிலையை ஏற்படுத்தியிருப்பினும் தாம் வாழும் இயல்பு வாழ்வினை நிதானித்து அனுபவித்து வாழ்ந்து கொண்டிருப்பவர்களும் இருக்கத் தான் செய்கின்றனர்.

தங்கள் வாழ்வின் அனுபவங்களை தாம் கடந்து வந்த பாதைகளின் காட்சிப்படிமங்களை ஏதோ ஒரு ஊடகத்தின் ஊடாக வெளிக் கொண்டுவருதலை அவர்கள் செய்து கொண்டு உள்ளனர். அவ்வாறான ஒன்றாகத் தான் எமது பிரதேச செயலகத்தினால் வெளியிடப்படும் தமிழிசை என்னும் இதழையும் நான் காண விரும்புகிறேன்.

படைப்புக்கள் தாம் வாழும் சூழலின், தமது பிரதேசத்தின், தமது இனத்தின், தமது மொழியின் பிரதிபலிப்புக்களாக அமைய

வேண்டும். குச்சவெளி பிரதேசத்தின் தொன்மங்களை, வரலாறுகளை, பண்பாட்டை ஆவணப்படுத்தும் ஒரு ஆவணமாக எதிர்காலத்தில் இவ்விதழ் அமைய எமது பூரண பங்களிப்பை நாம் அனைவரும் வழங்க வேண்டும்.

இளந்தலைமுறையினரிடம் எழுத்தாற்றலை வளர்க்கக் கூடிய முன்னெடுப்புக்களை மேற்கொண்டு எமது பிரதேசத்தின் எழுத்தாளர்களுக்கான ஒரு களமாகவும் இவ்விதழ் செயற்பட வேண்டும். பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என்ற எல்லையைக் கடந்து எமது பிரதேசத்தின் குரலாக இவ்விதழ் ஒலிப்பதிலேயே எமது வெற்றி தங்கியுள்ளது.

தனிக் கவிதை இதழாக அறிமுகமாகி இருக்கும் தமிழிசை இதழானது கவிதை, கட்டுரை, நாடகம், பாடல், வரலாற்று ஆய்வுகள் என பல்வேறு விடயங்களையும் தாங்கிய இதழாக வெளிவர வேண்டும் எனக் கேட்டுக் கொள்வதுடன் குறுகிய காலத்திற்குள் வெளிவந்த இவ்விதழின் வளர்ச்சிக்கு பங்களித்த அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எனது மனப்பூர்வமான பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதுடன் குறிப்பாக தலைமையக சமுர்த்தி முகாமையாளரான திரு.ச.கோபிரமணனது இந்தச் சிந்தனை செயல் வடிவம் பெறுவதையிட்டு அவருக்கு எனது விசேடமான பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கு. குணநாதன்**
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
குச்சவெளி.

# மதிப்புரை

குச்சவெளிப் பிரதேச செயலகத்தின் **'தமிழிசை'** – எமது பிரதேசத்தின் தொன்மைகளைத் தேடும் கலை, இலக்கிய இதழின் முதலாவது இதழினை வெளியிடும் இந்த சந்தர்ப்பத்தில் நானும் இக் குழுமத்தில் பங்கெடுப்பதை எண்ணிப் பெருமிதமடைந்தவளாக, இந் நூலின் ஒவ்வொரு தாளிலும் தமது திறமைகளைத் தட்டச்சிட்ட அனைவருக்கும் மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உத்தியோகத்தர் ஒவ்வொருவருக்குள்ளும் ஆழ்ந்திருக்கும் தனித்திறமையை வெளிக் கொணர களமமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற பெருங்கனவு நனவாகியிருக்கிறது. அதற்கான ஆக்கமும் ஊக்கமும் அளித்த எமது பிரதேச செயலாளர் திரு.கு.குணநாதன் அவர்களுக்கும் மற்றும் இதழ் வெளியீட்டுக் குழுவிற்கும் தமது அயராத ஒத்துழைப்பினை வழங்கிய சகல அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் பங்காளர்களுக்கும் நன்றி கூறியவளாக இந்த சந்தர்ப்பத்தில் மனநிறைவடைகிறேன்.

அலுவலகத்தில் ஆடல் பாடல் பேச்சுத் திறமையை வெளிக் கொணர பல்வேறு விழாக்கள் ஒழுங்கமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற அதேவேளை எழுத்துத்திறனை முழுமையாக வெளிக் கொணர சந்தர்ப்பங்கள் பெரிதாக வழங்கப்படுவதில்லை. அதனை இனங்கண்டு இன்று எமது அலுவலர்களின் எழுத்தாற்றலுக்குத் தீனி போடும் விதமாக இந்நூல் வெளிவருவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். தமிழிசையில் தமது ஆக்கங்களை வெளியிட்ட சகலரிற்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

இந்த இதழிற்கான மதிப்புரையை வழங்குமளவிற்கு நான் சிறந்த எழுத்தாளரோ, இலக்கியவாதியோ அல்ல இருப்பினும் என் மனதில் தோன்றிய விடயங்களைத் தங்களுடன் பகிர்கிறேன். இவ் இதழில் வெளிவந்திருக்கும் கவிதைகள் தொடர்பில் விமர்சனங்கள்

வெளிவரக் கூடும் பாலிலிருந்து நீரைப் பிரித்தெடுக்கும் அன்னப்பறவை போல நேர்மறை விமர்சனங்களையேற்று அடுத்துவரும் இதழை மெருகேற்றுவோம்.

கவிதை எழுதுவது தொடர்பில் வரைமுறைகள் எங்கும் குறிப்பிடப்படவில்லை எனினும் மரபுக் கவிதைகளில் ஆர்வம் கொண்டோர் இது மாதிரியான நவீன கவிதைகளை விமர்சிக்கக் கூடும். கவிதை என்றால் என்ன என்பதற்கான வரைவிலக்கணத்தைத் தேடித் தோற்றுப் போயிருக்கின்றேன். இருப்பினும் தாங்கள் எழுதுவதெல்லாம் கவிதை என எண்ணும் உரிமை யாவருக்கும் இருக்கிறது. இதனை யாரும் மறுப்புச் சொல்லி விட முடியாது.

கவிதை எழுதும் ஒவ்வொருவரும் சிந்தித்தால் தமது படைப்புக்கென ஒரு பாணியை உருவாக்கிக் கொண்டு இலக்கிய உலகிற் பயணிக்க முடியும். அதற்கான முதிர்ச்சியும் அறிவும் ஒருசேரக் கிடைக்கும் களமாகத் தமிழிசையைப் பயன்படுத்துவோம். கவிஞரின் எழுத்தோட்டத்தில் எதிர்மறை விமர்சனங்கள் வாசகர் பால் இருக்கலாம் ஆனால், அதற்காக அவர்கள் எழுதுவதை நிராகரிக்கும் உரிமையை யாரும் எடுத்துக் கொள்ள முடியாது. ‘தக்கன பிழைக்கும்’ கோட்பாட்டினை நாம் மனதிற் கொண்டாற் சரி.

கவிதை எழுதுவதற்கான முதற் தகுதியே கவிதை மனம் வாய்க்கப் பெறுவது தான். இங்கு எழுதிய அனைவரும் இதற்குள் அடக்கம். ஒரு அனுபவத்தீ கவிதைப் பிழம்பாக உருப் பெறுவதற்கு எடுக்கும் கால அளவுகோல் கவிஞருக்குக் கவிஞர் மாறுபடலாம். எனவே, தம்மை ஆழமான தேடலுக்குட்படுத்திக் கொண்டு தமது தேடலில் கண்டடைந்த பொக்கிஷங்களை எழுத்துருவாக்கி எம் அனைவருக்கும் இலக்கிய விருந்து படைக்க எமது எழுத்தாளர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு எழுத்தாளரும் தனக்கான கவிதை மொழியைத் தேடுவதன் மூலம் இயல்பாகவே தனக்கான தேர்ந்த மொழியைக் கண்டடைந்து கொள்ள முடியும். வேலைப்பளு இன்னோரன்ன காரணங்களாற் பல மாதங்களாகத் தடைப்பட்டுப் போயிருந்த

வாசிப்புப் பழக்கத்தை இவ்விதழ் தட்டி எழுப்பி விட்டிருக்கிறது. கிட்டத்தட்ட ஓராண்டிற்குப் பின்னர் மனம் நெகிழத் தக்க கவிதைகளைத் **'தமிழிசை'** அனுபவிக்கத் தந்திருக்கிறது.

என்னைக் கவர்ந்த வரிகளை அடிக்கோடிட்டு சிலாகிக்க மனம் தூண்டினாலும் கவிதைகளுக்குள் நுழையும் வாசகர் எண்ணங்களை எனது எழுத்து சிதைத்துவிடக் கூடாது எனும் முன்னெச்சரிக்கையுடனேயே எந்தவொரு கவிதையையும் எடுத்துக்காட்டாகவோ உதாரணமாகவோ நான் முன் வைக்கவில்லை.

**'தமிழிசை'** இரண்டாம் இதழ் இதை விட மேலும் மெருகுடன் சகல கலை இலக்கிய வடிவங்களையும் தாங்கி எமது கைகளில் தவழ வேண்டுமென்ற எதிர்பார்ப்பதுடன், இவ் இதழிற்கான அத்திவாரத்தினை இட்ட திரு. **ச.கோபிரமணன்** அவர்களிற்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இ. பாமா,**
உதவி பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
குச்சவெளி.

# வாழ்த்துரை

குச்சவெளி பிரதேச செயலக அலுவலர்களின் உள்ளார்ந்த திறமைகளை வெளிக்கொணரும் “தமிழிசை” யின் முதல் முயற்சிக்கு எனது வணக்கம். சமுர்த்தி முகாமையாளர் திரு.ச.கோபிரமணனின் இம்முயற்சியினை வெகுவாகப் பாராட்டுகின்றேன். இலைமறை காயாய் இலைகளுக்குள் மறைந்திருக்கும் மழைத்துளியாய் காணப்படும் எமது பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் திறமைகள் 12 கவிதைகளாக முதல் இதழில் வெளிக்கொண்டுவரப்பட்டுள்ளன.

இம் முதல் முயற்சியினைப் பாராட்டுவதுடன், தொடர் முயற்சிகள் தமிழாய், இசையாய் குச்சவெளி பிரதேச செயலக ஆட்புலத்தின் தொன்மைகளாய் வெளிவரவும், பலரின் பங்குபற்றலுடன் காலாண்டுக்கு ஒருமுறை பன்முக இதழாய் வெளிவரவும் மனமார வாழ்த்துகிறேன்.

**சவரிமுத்து அன்ரனிதாஸ்**
கணக்காளர்,
பிரதேச செயலகம்,
குச்சவெளி.

# வாழ்த்துரை

இந்நூலாசிரியர் ச.கோபிரமணன் அவர்களின் ''தமிழிசை'' எனும் கவிதைத் தொகுப்பிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

எமது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி தலைமை முகாமையாளராக கடமையாற்றிக் கொண்டிருக்கும் இவர் எல்லோரினதும் நன்மதிப்பு, கௌரவம், பாராட்டுக்கள், வாழ்த்துக்களைப் பெற்றவர். இவ்வாரான விற்பன்னரான ச.கோபிரமணன் அவர்களின் எழுத்தாற்றலும் இத்தொகுப்பை வெளியிடும் முயற்சியும் வரவேற்கத்தக்கது.

இக்காலப்பகுதியில் உருவாகும் இக்கவிதைத் தொகுப்பானது இலை மறை காய்களாக எமது அலுவலகத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர்களின், உணர்வுகளையும், ஆற்றல்களையும் ஒருங்கே சேர்த்து இனிமையான கவிதைத் தொகுப்பாக உருவாக்கப்பட்டுள்ளமை பாராட்டத்தக்கது.

இவை போன்ற இதழ்களை தொகுத்து வழங்கும் இவ் இளங்கலைஞனுடைய படைப்பாக்கப்பணிகள் இனிவரும் காலங்களில் சமூகப்பற்று, மதப்பற்று, மொழிப்பற்று போன்ற நற்பண்புகள் நிறைந்த ஆக்கங்களாக மேலும் மிளிர எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து கொள்கின்றேன்

**இ.மு. நாசிக்**

உதவி திட்டமிடல் பணிப்பாளர்,
பிரதேச செயலகம்,
குச்சவெளி.

# சென்று வா 2021

இருபத்தோராம் ஆண்டே போ...

எம் பிள்ளைகளின் கல்வியைத் தின்ற ஆண்டே போ...

பொருளாதாரத்தை விழுங்கிய ஆண்டே போ...

மனதார வலியைத் தந்த வருடமே போ...

நாமறியா கொடிய நோயைத் தந்த நூற்றாண்டே போ...

பல ஊசிகளை எமக்கேற்றிய ஆண்டே போ...

இத்தனையும் மீண்டும் வேண்டாம்...

இருபத்தியிரண்டே...

புதிதாக மலர்ந்து வா...!!

**ம. கௌரிதாசன்**

அபிவிருத்தி உத்தியோகத்தர்

# கடமைப் பட்டியல்

கோழி மேய்ச்சாலும்
கவர்மெண்டுல மேய்க்கணுமெண்டு
கனவான்கள் சொன்னதற்கிணங்க
விடிய விடிய படித்து
விரல் நோக ரெஸ்ட் எழுதி
வேலை பெற்றுச் சென்றேன்

பன்னிரண்டு அங்குல பேப்பரில்
பட்டோலை வடிவில்
பதவிப் பெயர் போட்டு
பல கடமைகளைத் தந்தார்கள்

கவனம் சிதறாமல் கண்ணியமாக
கடமையினைச் செய்து வந்தேன்
காலத்தின் விதி...
கண்மணி எனும் அவளையும்
கடமைப்பட்டியலுடன் சேர்த்து
முழுநேரமாக மேய்ச்சுக் கொண்டிருக்கிறேன்...!!

**சவரிமுத்து அன்ரனிதாஸ்**

கணக்காளர்

# மழையில் ஒருபொழுது

மழைக்காலத்தின் இரவுவேளை
இருள்சூழ்ந்த வெற்றிவேளை...
தெருவோரமாய் ஒதுங்கிநின்று
மழைதனை வேடிக்கை பார்த்த என்னை
உரசிச்சென்றது மழைச்சாரல்...

காட்சிகள் நீளமாக
கற்பனையோ நீண்டுகொள்கிறது...
மீண்டுமொருமுறை மெல்ல
எட்டிப்பார்க்கிறேன் வெளியே...
நீலவானமது கருமை கொண்டுள்ளது...

தார்ச்சாலையில் வீழ்ந்த துளிகள்
வீதிவாகன விளக்கொளியில்
விதவித வண்ணக்கோலங்களாய்...
சில நொடிகளே என்றாலும்
பிரமிக்கும் கொள்ளை அழகு...

முழுதாய் நனைந்தபிறகும்
முக்காடு போட்டது போல
கறுப்பு அங்கிதனை அணிந்துகொண்டே
புத்தகச்சுமைகளோடும் நடைபவனி...
இருசக்கர வாகனங்களின் வீதியுலா...

மெய்மறந்த வேளைதனில்
வானைக் கிழித்து தரையிறங்கி
செவி கிழிக்கும் சப்தத்துடன்
காரிருள் விலக்கிய ஒளி
இறைவனின் விளக்குதானோ...

இயற்கையின் இனிமையிலும்
செயற்கையின் எழிலிலும்
எத்தனை எத்தனை இதமோ...
இந்தப் பிறவி போதாது
இயற்கையோடியைந்து வாழ்ந்திட...

**திருமதி. பி. லவன்**
முகாமைத்துவ உத்தியோகத்தர்



# பெருந்தொற்றினைத் தடுப்போம்

கண்ணுக்குத் தெரியாமல் தரணியெங்கும் பரவி
மறந்துபோன கலாசாரத்தையும்
மறைத்துவிட்ட பண்பாட்டையும்
அவனியெங்கும் கொண்டுசேர்த்தாய்
தேகம் விட்டு தேகம்தாவிப்
பூமியில் நீ செல்லாத தேசமில்லை
எதிர்வரும் துயரை எச்சரித்ததால்
உன் பெயர் சொல்லாத நாவுமில்லை...

கைகுலுக்கி பழகியவரெல்லாம்
கையெடுத்து வணங்கிநிற்க
கட்டியணைத்து கதைபேசியவர்களெல்லாம்
பத்தடி இடைவெளியில் நலம் விசாரிக்க
உணவு,உடை,உறையுள் அத்தியாவசியம்
அன்று படித்தது மறந்து
முகக்கவசம்,கைகழுவும் திரவம், சுத்தம் மட்டும்
அதற்கு மேலாய் அதை விட மேலாய்...

உன் வருகை கண்டு வருந்தி
மனித மனமது குழம்பித் தவித்து
உள்ளத்திலே பயம் கொண்டு
இல்லத்திலே பதுங்கச் செய்தாய்
எத்தனை எத்தனை வீழ்ச்சிகள்
எதிர்பார்த்த எதிர்பாரா இழப்புக்கள்

எதிர்த்துநிற்கத் துணிவில்லை
எதிர்க்கும் சக்தி எவர்க்குமில்லை

அடுத்தவர் கைதீண்டலில் தொடங்கி
தும்மலில் படர்ந்து பேச்சில் நிறைந்து
மூச்சைநிறுத்தும் காலனாய்
மரணபயத்தோடு வாழச்செய்தாய்...
கண்ணிமைக்கும் நேரத்திற்குள்
கணக்கில்லா பாதிப்புக்கள்
எண்ணிலடங்கா இழப்புக்கள்
நொடிப்பொழுதில் நிரந்தர தூக்கம்...
கலியுகத்தின் கதாநாயகனே!
இன்னது மனிதவாழ்வென்று உணர்வித்தாய்
மூடநம்பிக்கை என்றதன் உண்மை உரைத்தாய்
மூழ்கிப்போன சத்தியம் நிலைக்கச் செய்தாய்
காலனாய் வந்தாலும் காத்திருந்து
நல்வழிகாட்டினாய் நல்மனமாய் வாழ்ந்திட...
நம்பிக்கையால் வெல்வோம் உன்னை...!
ஒன்றுபட்டு உயர்ந்து நிற்போம்...!



**திருமதி. நி. சிவநயனி**
முகாமைத்துவ உத்தியோகத்தர்

# நான் வீழ்வேனென்று நினைத்தாயோ!

இருளறையில் கருவாகி!
பிண்டம் அது உருவாகி!
உரு அது உயிராகி!
பத்துத்திங்கள் போராடி!
உலகம் காண நேரம் வர!
நேரம் அது நீண்டு செல்ல!
கிழிக்கப்பட்ட வயிற்றிலிருந்து - சிசுவாக வெளிப்பட்டதும்
தொடங்கியது போராட்டம்!

வேரோடிய தொப்புள் கொடி
வெட்டியதும் - தட்டிய கையின் வலி மிகையால்
அழுகையுடன் ஆரம்பித்தது
முதல் சத்தம்!

தலை நிமிர ஒரு பொழுது!
தரை இருக்க ஒரு பொழுது!
தவழ்ந்து பழக ஒரு பொழுது!
நடை பழக ஒரு பொழுது!
கதை பழக ஒரு பொழுது!
பொழுது பொழுதாய் சிறு பொழுதும்
ஓய்வின்றி – பல பொழுது போராடி
சிறுவனானேன்!



சிறுவன் முதல் குமரனாக இடைப்பட்ட
இடைவெளியில்!
தனிமையோடு போராட்டம்!
வறுமையோடு போராட்டம்!
பசியோடு போராட்டம்!
கல்வி கற்க கடும் போராட்டம்!
அப்பப்பா! எத்தனையோ போராட்டம்,

என சலிக்காத மனது அது – தூக்கத்தை
தொலைத்த கனவினை நோக்கி
உந்திச்செல்ல!
கற்ற வித்தைகள்
எல்லாம் - கைகொண்டு!
முயற்சிகள் பல கொண்டு!
அவமானங்கள் பல கண்டு!
வாழ்க்கை இதுதான் என
கண்டதும் - பகை மேகம் புடை சூழ்ந்தது!

வழி மீது விழி வைத்து!
அடிமீது அடி வைத்து!
வஞ்சமாய் காத்திருந்து!
தருணங்கள் பார்த்திருந்து!

பகை தீர்க்க பல பழி சுமத்தி!
மாண்டு போக – பல வழி சமைத்தார் அவர்!
எத்தனை துயர் தந்தும்!
இறைவன் அவன் துணை கொண்டு!
மீண்டும் - மீண்டு வாழும் எனை
எதைக்கொண்டு வீழ்த்துவாய்!

வீறு கொண்ட வீரத்துடன்!
முகம் தன்னில் புன்முறுவலுடன்!
முண்டாசுக்கவி போல – நான் உன்னை
கேட்கிறேன்!
பல வேடிக்கை மனிதரைப்போலே!
நான் வீழ்வேனென்று நினைத்தாயோ!

**மு.ர. முஹம்மது ரிஸாத் கபீல்**
தொழிநுட்ப உதவியாளர்

# வீறு கொண்டெழு பெண்ணே!

வாழ்க்கை எனும் பயணத்தில்
விதியின் வசத்தால் பயணிக்கும்
அப்பாவிப் பெண்ணே!

எதற்காகப் பயப்படுகிறாய்?
யாரைக் கண்டு — உன்
கண்களில் கண்ணீர்?
ஏதேனும் தவறிழைத்தாயா?

தவறு செய்பவர்கள்
தலை நிமிர்ந்து நடக்கையிலே
எதற்காக நீ
தலைகுனிகின்றாய்?

பெண் என்பதனாலா? - இல்லை
உன்னில் குடிகொண்ட
அச்சத்தினாலா? — எனக்குப்
புரியவே இல்லை!

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
என்பது போல - பெண்களுக்குப்
பார்வையே நெருப்பு — நீ
பார்ப்பதைக் கண்டு — பிறர்
பயப்பட வேண்டும்!

நீ மட்டுமல்ல!
உன்னைப் போன்று
பல பெண்கள்
பயத்தோடு தான்
வாழ்கின்றார்கள்!

அந்தப் பயமே
அவர்களின்
வெற்றி வாழ்விற்கு
தடையாக இருக்கின்றது!

மாற்றம் ஒன்றே
மாறாதது!
ரௌத்திரம் பழகு!

உலகினை
சிறகுகள் கொண்டு
அளவினை அறிந்து
உனது வாழ்வினை
நீ வாழத் தொடங்கு
யாருக்கும்
அஞ்சிட வேண்டாம்!

இவ்வுலகில் - அனைவரும்
தீயவர்கள் அல்ல! - அனைவரும்
நல்லவர்களும் அல்ல!

உன்னைச் சுற்றி
இவ்வளவு பேர்
இருக்கையில்
எதற்கு இப்பயம்?

சமயோசிதமாய் யோசி!
புத்திசாலியாக சிந்தித்து
உணர்வதோடல்லாமல்
வீறு கொண்டெழு பெண்ணே!
பெண்களே இந்நாட்டின்
கண்கள் என்பதை – உணர்ந்து
உன் வாழ்வின் இலக்கினை அடைய
வீறு கொண்டெழு!



**நாகேஸ்வரன் சுமதி**
அபிவிருத்தி உத்தியோகத்தர்

# நியமனம்

நீண்டநாள் கனவு
நீளமான இரவு
விடியலுக்காய் காத்திருந்தேன்

கடிதம் வந்தது
கவரை விரித்தேன்
கண்ணுக்கு இதமான வார்த்தைகள்
கச்சிதமான மொழிவுகள்

ஆவலுடன் எழுந்தேன் - புதிய
ஆடைகளை அணிந்தேன்
அலுவலகம் சென்றேன்
பட்டதாரி நியமனத்தைப் பொறுப்பேற்க.

**சவரிமுத்து அன்ரனிதாஸ்**
கணக்காளர்

# விடியல்

கொடுரமான

கொரோனாவின்

கோரப்பிடியில்

முழுநாடும்

சிக்கித் தவிக்கின்றது

ஒருபக்கம்

மறுபக்கம்

அயராது உழைத்து

அல்லலுறும் மக்களை

கொத்தித் தின்னும்

பிணம் தின்னிக் கழுகுகளாக

முதலாளி வர்க்கம்

இன்னும் எத்தனையோ

சொல்லொணாத் துயரங்கள்

சமத்துவமின்மை,

சமாதானமின்மை,

விலைவாசி உயர்வு,

அத்தியாவசிய

பொருளுக்குத் தட்டுப்பாடு,
பசி, பட்டினி, பஞ்சம்,
எரிவாயு அடுப்பு
வெடிப்பு என்று
எத்தனையோ அவலங்கள்
அடிக்கு மேல் அடியாய்

அனுதினமும்
விடியலின் பின்
அனைவரின் மனதிலும்
இன்று என்ன
நடக்குமோ என்கின்ற
எண்ணத் துடிப்போடு
கழிகின்றது வாழ்க்கை
என்று மாறும் இந்த
கொடிய பேரவலம்
எம் நாட்டு மக்களுக்கு!



**நாகேஸ்வரன் சுமதி**
அபிவிருத்தி உத்தியோகத்தர்

## இரண்டாயிரத்து இருபத்தொன்று ஆறாத வடுக்களாய்...

மனிதராய்ப் பிறந்த பாவத்திற்காக மானிடா
நாம் இத்தனை இன்னல்களை எதிர்கொள்கிறோம்
கொரோனா என்னும் கொடிய கிருமி
கொன்றதே கோடிக்கணக்காய் உயிர்களை
வாட்டி வதைக்கும் வைரஸ் இதனால்
நாட்டில் கூட முடக்கம் ஒடுக்கம்
ஏறிக் கொண்டே இருக்கும் விலைவாசி
எப்படித்தான் சமாளிப்பதோ நீ யோசி
இத்தனை துன்பம் போதாதென்று
வெடித்துச் சிதறும் எரிவாயு சிலிண்டர்கள்
எங்கு சென்று சொல்வதம்மா இந்த இன்னல்களை
போதாக்குறைக்கு பொல்லாத ஒமிக்றோன் வேறு
உலகினை உலுக்கியெடுக்க
ஆண்டவனே உம்மை விட்டால்
யாருமில்லை எம்மைக் காத்தருள
கைகூப்பி இறைஞ்சுகிறோம்...!!

**கு. விஜயகுமாரி**
பட்டதாரிப் பயிலுனர்

# கரம் கோர்ப்போம்

காலங்கள் மறைத்துவிட்ட
காட்சிகளை
கஷ்டப்பட்டு சேமித்தேன்
ஒரு தொன்மை வாய்ந்த கலாசாரம்
மீண்டும்
முதலில் முகத்தையும் பின்பு
முகவரியையும்
தொலைத்த நிகழ்வை

அன்று நம் பிறப்புக்கள்
அர்த்தமின்றி இருந்தாலும்
அர்த்தப்படுத்திக்கொள்ள விரும்புகின்றேன்
அதிசயமே நடந்தாலும்
சரித்திரத்தில் திரும்பி பார்க்க எவருமில்லை
கோடிக்கண்களின் துயரத்தை – ஒரு
சோடிக்கண் பார்த்தது, இருந்தும்
என்ன பயன் ? பரிதாபம் அடையவில்லை

பார்த்ததுண்டா .......?
சொந்தமண்ணில் நிர்க்கதியானதை.
மீண்டும் பிறப்பெடுத்த நம் உயிர்களின்
மரணகாலம்
நம் மக்களின் இருண்டகாலம்
கடல் அன்னை கூட
செங்குருதியை
பச்சை குத்திக்கொண்டாள்.

அன்று உணவிற்காய் கதறவில்லை
உணர்விற்காய் கதறினோம்
இருந்தும் என்ன பயன் .......?
இறைவனுக்கு செவிப்பறை இல்லை என்று
அப்போதுதான் அறிந்தோம்
காற்றின் திசையில்
கலந்து விட்டது – நமது
காந்தக்குரல்.............

தாயின்மடி என்ற சொர்க்கத்தை
மௌனமாய் திருடிக்கொண்டது
மரணம் - தனிமை
அவனைப்போல் ஆயிரம் பேரை
தன்னகத்தே கொண்டு
அமைதியாய் ஆட்சி புரிந்தது.
அவசரகாலச்சட்டத்தில் அழுகைகளும்
அர்த்தமின்றி போகும்.

உயிரைப்பறிக்கும் சன்னங்களை கொண்டு
உலகநாடே பவனிவந்தது.
தன் ரகசிய வடுக்களை
வெளிக்காட்ட முடியாமல்
மௌனம் காத்தது மொழி,
பொழுதும் கார் இருளால் சூழ்ந்தது
சூரியனின் உதயமும் அங்கு
அஸ்தமனமாகியது

இது உயிர்களை மதிக்காத
ஓட்டுண்ணி தேசமடா......
உலகநாடுகளின் அரவணைப்பு .... அது ஒரு
அர்த்தமற்ற அந்தப்புரம்
ஆமையை கூட முந்தமுடியாமல்
காலங்கள் உருண்டோடின
அடுத்த தலைமுறைக்கு தேவை ஆயுதபோராட்டம் அல்ல
அர்த்தமுள்ள வாழ்க்கை

இலை உதிர்கின்ற காலத்தில்
அவற்றின் ஆயுளைதான் அதிகரிக்கச் செய்ய முடியுமா....?
உதிரட்டும் அனைத்தும் .........!
மறுபடியும் பல துளிர்
அதே இடத்தில்
இன மத மொழி கலாசார பேதம் இன்றி – இனி
வருகின்ற பகையை வெல்வோம் - ஒன்று சேர்ந்து நம்
வையகத்தை காத்திடுவோம்.

**லதாகரன் ஹிஷா**
பட்டதாரிப் பயிலுனர்

# ஒரு அகதியின் நாட்குறிப்பிலிருந்து...

இடப்பெயர்வின் வலிகள்
எனக்குள்ளும் பெருங்கதையாய்...
தத்தித் தவழ்ந்த
அந்தக் கடலோரக் கிராமத்தின்
சுகமான ஜீவத்துடிப்பு
ஆக்கிரமிப்பின் கெடுபிடிகளால்
மூர்ச்சையாகிப் போனதால்
நாடோடியாய் இன்று நான்.
வியர்வையையும் வெட்கையையும்
இலவசமாய் வழங்கும் UN படங்குகள்
பகல்களைக் கழிப்பதே
ஒரு போராட்டம் தான்.
இரவுகள் கூட கொடுமை தான்.
காரணமின்றிய சுற்றிவளைப்புக்கள்
கைதுகள் கொலைகள்...!
அடிப்படை உரிமையைப்
பூர்த்தி செய்வதில்
தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்
முந்தி நிற்கும் ஆனால்
நிரம்புவது என்னவோ
அவர்களின் பைகள் தான்.
உணவின்றிய பட்டினி ஒருபுறம்



கட்டியவளை தொட்டணைக்கும்
மனமின்றிய நிலை மறுபுறம்.
காற்றடித்தால் பிடுங்கப் பட்டுவிடும்
படங்குக்குள் எப்படித்தான்
கலவி கொள்வது...?
மழைக்காலம் தொடங்குகையில்
குடிசைக்குள் வெள்ளம் வரும்
அடுப்பு மூட்டிக் கஞ்சி வைக்க
நெஞ்சு வெடித்துவிடும்.
கண்கலங்காமல் உன்னை
காப்பாற்றுவேன் என்று
காதல் செய்து மணந்தவளை
காணுகையில் அழுகைவரும்
அதற்குள்ளும் துணிந்து சொல்வாள்
வாழ்ந்து காட்டுவோம் என...
சொந்தக் கிராமத்தின்
சுவடுகளை மனதிருத்தி
அளவளாவி கதைத்தே
அகதி வாழ்க்கை தொடரும்......!

**ச. கோபிரமணன்**
சமுர்த்தி முகாமையாளர்

# போதும் வாழவிடுங்கள்

நானும் மனிதன் தான்
எனக்குள்ளும் கனவுகள்
நிராகரிக்க முடியாத விருப்புகள்
உயிர் பற்றிய பயம்
வாழவேண்டுமென்ற ஆசைகள்
சாதிக்க வேண்டுமென்ற வெறி
தொடர்கதைகளாய் இன்னும்...இன்னும்
பல்லாயிரம் பகிர்வுகள் உண்டு
போதும் நல்லதொரு சூழலில்
என்னையும் வாழவிடுங்கள்!!

**ச. கோபிரமணன்**
சமுர்த்தி முகாமையாளர்



வெளிவர உள்ள தமிழிசை இதழில் எமது பிரதேசம் சார்ந்த விடயங்களை எந்த வடிவிலான ஆக்கமாகவும் நீங்கள் சமர்ப்பிக்க முடியும். அத்துடன் தங்கள் ஆக்கங்களை தட்டச்சு செய்து தருவது வரவேற்கப்படுவதுடன் தாங்கள் தட்டச்சு செய்யும் போது பாமினி (Bamini) எழுத்துருவைப் பயன்படுத்துவதுடன் Microsoft word வடிவத்தில் கோப்புக்களை தந்துதவுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

